# கெஸ்பேவை நகர சபை
# கொழும்பு மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜுலை 04 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவெம்பர் 30 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கெஸ்பேவை நகர சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காசேட்டின் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மேலதிகப் பற்றாகிய ரூபா 15,940,916 பரீட்சை மீதியில் ரூபா 15,737,992 ஆகவிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டில் சபைக்குச் செலுத்திய ரூபா 32,329,841 முத்திரை வருவாயைக் கழித்து, மாகாண வருவாய் ஆணையாளரால் மீளாய்வாண்டின் முத்திரை வருவாய் வழங்கப்பட்டிருந்தது. எனினும், கழித்துக் கொள்ளப்பட்ட முத்திரை வருவாய் பெறவேண்டியனவாகவும் கழித்துக்கொள்ளப்பட்ட படியாகிய ரூபா 20,730 முன்னைய ஆண்டின் செலவினமாகவும் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(இ) சபை நன்கொடையாகப் பெற்ற 4 டிறக்டர்கள், 7 டிரெய்லர்கள், 4 கணனிகள், 2 தொலைக்காட்சி சாதனங்கள், 1 கை டிறக்டர், 8 கழிவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் கை வண்டிகள், 1 இயந்திரம் மற்றும் 1 சக்கர நாற்காலி ஆகிய இயந்திரங்களதும் உபகரணங்களதும் பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 35,425,969 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிசார் கூற்றுக்களில் காணப்படும் ரூபா 263,958,998 கூட்டுத்தொகையுடைய 6 கணக்கீட்டு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றுக்குரிய உப பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளுடன் கணக்கிணக்கஞ் செய்யப்படுகையில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. வேறுபாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 7,876,952 ஆகும்.

**1.3.4 கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்**

சபையின் நிதிசார் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதன் பொருட்டு 2006 தொடக்கம் 2010 வரை கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 4,317,253 கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 105,445,736 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 93,755,019 ஆகும்.

## 2.2 வங்கிக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 261(3) மற்றும் 387 என்பவற்றில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக வங்கி நடைமுறைக் கணக்கு மேலதிகப் பற்றாக இருந்ததுடன் வங்கி அறவீடு செய்த மேலதிகப் பற்றினது பொழிப்பும் கீழே காணப்படுகின்றது.

| ஆண்டு | ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் மேலதிகப் பற்று மீதி | வங்கி அறவீடு செய்த மேலதிகப் பற்று வட்டி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2011 | 15,940,916 | 2,709,325 |
| 2010 | 15,631,859 | 2,358,240 |

(ஆ) 2011 ஜுலை மற்றும் அதற்கு முன்னர் வைப்பிலிடப்பட்டு இதுவரை தேறாதிருக்கும் ரூபா 10,302 பெறுமதியான 3 காசோலைகள் சம்பந்தமாகத் தொடர் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) கொடுப்பனவு மறுக்கப்பட்ட ரூபா 291,382 கூட்டுத் தொகையுடைய 8 காசோலைகள் சம்பந்தமாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 189 மற்றும் 486 என்பவற்றில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) ஆண்டு முழுவதும் சேமிப்புக் கணக்கு ஒன்றில் ரூபா 4,581,918 இருந்தமையால் 4 சதவீதப்படி ரூபா 185,184 வட்டி வருவாய் பெறப்பட்டபோதும், இத்தொகையை நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்து அதிக வட்டி வருவாயை ஈட்டுவது தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்படவில்லை.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய் உள்ளபடியான வருவாய் நிலுவையாக உள்ள வருவாய் என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிதியம் |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 22,163 | 30,502 | 25,020 |
| (ii) | குத்தகை வாடகை | 11,355 | 11,201 | 4,739 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,903 | 2,834 | 415 |
| (iv) | பிற வருவாய் | 8,786 | 20,074 | - |

## 2.4 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

சேவை நீங்கிய, ஓய்வுபெற்ற, மரணமடைந்த 20 உத்தியோகத்தர்களிடமிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 369,416 கடன் மீதியை இலங்கை குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 11.10 மற்றும் 11.12.1 பிரிவுகளின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

களஞ்சியப் பெறுவனவுக் குறிப்பு 1354 க்கமைய, கொள்வனவு செய்த 53"X18.5"X24.5" அளவிலான 4 லாச்சிகள் அடங்கிய உருக்குக் கபினட்டிற்கு 2011

செப்டம்பர் 19 ஆந் திகதிய 1551 ஆம் இலக்க மற்றும் 2011 நவெம்பர் 15 ஆந் திகதிய 1863 ஆம் இலக்கக் கொடுப்பனவு உறுதிச் சான்றுகளின் மூலம் ரூபா 15,904 வீதம் இரு முறை பணம் செலுத்தப்பட்டிருந்தது. கூடுதலாகக் கொடுப்பனவு செய்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.6 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ அதிகார சபையால் கெஸ்பேவை நகர சபைக்கு முறையே 2009 ஜனவரி 20 மற்றும் 2011 டிசெம்பர் 14 ஆந் திகதிகளில் நன்கொடையாக வழங்கிய 4 டிறக்டர்கள் மற்றும் 7 டிரெய்லர்கள் என்பவற்றைச் சபை சுவீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை இது வரை மேற்கொள்ளப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிசார் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு